என் பேனாவிலிருந்து...



# இயல் - 1


## பவித்திரா தேவரஞ்சன்

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை


சரியானதைத் துணிந்து செய்

J/Vembadi Girls' High School
LIBRARY
Acc.No: LB 151
Class No: 811
Date:

என் பேனாவிலிருந்து......

# இயல் - I

பவித்திரா தேவரஞ்சன்

வேம்படி மகளிர் உயர்தரப்

பாடசாலை.

சரியானதை துணிந்து செய்

24

காரிகை கற்றுக் கவி பாடுதலில்
பேரிகை கொட்டி போரிடுதல் நன்று.

J/Vembadi Girls' High School
Acc No: LB 151
Class No: 811
Date:

# என் பேனாவிலிருந்து

## உள்ளே ----


1) விஞ்ஞானம் 1
2) சிகிரியா 3
3) நடனம் 5
4) எங்க வீட்டு டொண்டுவ்கள் 7
5) சிகரம் தொட்ட சச்சின் 9
6) பெண் 12
7) என் தாய் 13
8) எம்மினிய நேசம் 14
9) கிரிக்கட் 15
10) நட்பு 17
11) பூக்கள் 18
12) சுனாமி 19
13) உண்மைகள் 20
14) இளைஞர் சமுதாயத்தை விழித்து --- 21
15) நாளும் கனாதரும். 22

# அதிபரின் ஆசிச்செய்தி

எளிய அழகு தமிழில் அனைவரும் வாசித்து விளங்கக் கூடிய வகையில் கவிதைகள் அமைந்திருக்கின்றன. நாம் மொழியால் வேற்று உடையவராய் இருக்கலாம். ஆனால் நாம் மொழிபெயர்த்து எழுதியவை விடயம் சகலமட்டத்தவர்களையும் போய்ச் சேரவேண்டும். இருவகையில் இம்மாணவியான சாதனை பாராட்டத்தக்கது. திறமை, ஆர்வம் இவர் திறமை மேன் மேலும் வளரவேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

ச. சொர்ணலிங்கம்.
பிரதி அதிபர்
யா/ வேம்படி மகளிர் கல்லூரி

## வகுப்பாசிரியரின் ஆசிச் செய்தி.

பூவைந்து வயதினிலே தமிழுக்கு நாளும் தொண்டாற்ற வேண்டும் அதற்கும் படைக்க வேண்டும் என ஆர்வம் கொண்டு தான் எழுதிய கவிதைகளை ஒரு சஞ்சிகையாக ஆக்கியுள்ளார்.

மாணவியின் ஊக்கமும் ஆக்கமும் மென்மேலும் வளர்ந்து வாழ்வில் பல வெற்றிப் படிகளைத் தாண்ட வேண்டுமென ஆசி கூறுகின்றேன்.

நன்றி!

ஸ்ரீ. ரூபமோனா
வகுப்பாசிரியர்
மகா.
யா/ செம்புமணல்
உயர்தரப் பாடசாலை

# தமிழ் ஆசானின் ஆசிச் செய்தி

இலக்கியங்களை இலயித்து வாசிக்கும் ஒருவனாலேயே இலக்கியம் படைக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். அந்த வகையில், தான் எழுதிய கவிதைகளை ஒரு தொகையெடுத்து சஞ்சிகை -யாக ஆவது வெளியிட வேண்டும் என்ற இந்த ஆர்வத்துக்கு முதலில் பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்.

நவீன கவிதை உலகில் காலடி எடுத்து வைத்த இந்த வேம்படியின் புதல்வி நவீன இலக்கிய உலகில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற வேண்டுமென தமிழ்த்தாயை வணங்குகின்றேன்.

கன்னிக்கவிதை வாழ்க!!
கன்னித்தமிழ் வாழ்க!!

பொ. தேவகி
ஆசிரியர்
யா/வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை.

# முகவுரை

கவிதை என்பது ஒரு கலை
காவியம் போற்றும் அடியார்கள்
காலம் பூராகவும் காத்திருந்து
காட்டம் கொண்டது இதிலே.

சமூகத்தில் நடைபெறும் விடயங்கள்
சட்டகத்தில் எழுத்திட்டு
தத்ரூபமாக காட்டிய கலைஞர்கள்
தந்தது பேனாவிலிருந்து.

வைரமுத்துவின் கவிதைகளால் ஈர்க்கப்பட்டு
வைராக்கியத்துடன் கவியெழுத முனைந்து
கவி பாடக் கற்றுக் கொடுத்த
கலைவாணிக்கு எங்ஙனம் நன்றி சொல்வேன்

அம்மாவின் அரவணைப்பும்
அப்பாவின் ஆலோசனையும்
அன்புடன் கவி வடிக்க
ஆசையுடன் உதவினார்களே.

வேம்படியாளின் புதல்வியென்று
வேட்கையுடன் கூறிட
கலை படிக்க உதவிய நல் உள்ளங்களுக்கு
கரம் எடுத்து வணங்குகின்றேன்.

விஞ்ஞானத்தின் விளைவினால்
விரைவாக ஓடும் வாழ்வினை
படம் பிடித்து காட்டிய
பாடசாலைக்கு ஒரு தலைப்பு.

பல விடயங்களை அர்த்தமாக்கி
பாடல்களை கவியாக்கி
பாமரரையும் கவர்ந்த கவிதைகளுக்கு
பாங்கொரு எழுதுகின்றேன் நான்.

# விஞ்ஞானம்

விஞ்ஞானம் என்ற சொல் மட்டுமே
விளக்கமான பொருள் உண்டு.
இனம், மதம், மொழி, சமய வேறுபாடின்றி.
இடைமறித்து காட்டிய புதிய வழி.

விளையாட்டுக் குழந்தை சச்சின் முதல்
விண்வெளி மனிதர் யூரிககாரின் வரை
போர்த்துக் கொண்ட உறங்க
போர்வையாக உகந்தது இதுவே.

விஞ்ஞானமே! விஞ்ஞானமே,
என் வாழ்க்கையை
ஒளியுள்ளதாய் ஆக்கியதற்கு
நன்றி.

கணனி, தொலைபேசி, மைக்கிரோவே முதல்
பாரிய இயந்திரங்களின் வளர்ச்சி
எவ்வாறு முடிந்தது எம்மால்
எம் நவீன விஞ்ஞானத்தினால்.

கணனியை கண்டுபிடித்தாய்
கண்ணாறு கழித்தோம்.
செய்மதியை செய்வித்தாய்
செய்வதறியாது திகைத்தோம்.

நாம் எல்லோரும் அப்பப்பா என்ற போது
அப்பலோவினை ஏவினாய்
கொலம்பியாவில் சென்ற இவர் தெய்வங்கள்
உண்மையிலே தெய்வமாக்களாயே.

இது தருமா? சொல்
இவ்வாறு பல செய்த நீ
வித்தகர்களின் கையில் ஏன் அகப்பட்டாய்
அணுவாயுதமாக ஏன் மாறினாய்.

அரக்கர்களின் கையில் தவழும் - நீ
வித்தகர்களை எவ்வாறு புரிந்தாய் - சொல்
வெம்பழியாளரின் புதல்வர்கள் உன்னை தொட
வேகமாக காலை வெய் ஆழமாக.

# சிகிரியா.

சிகிரியா என்ற பெயர் பெற்ற நீயே
அஜந்தா ஓவியத்தின் வாரிசும் நீயே.
மும்பையில் மிளிரும் அஜந்தாவில்
பற்பல தொழில் நுட்பங்களைக் கொண்டாயே.


உலக அதிசயங்களில் எட்டாவதாக
இலங்கையிலிருந்து பச்சைக் கொடி காட்டினாயே.
காதல் கோட்டை தாஜ்மகால், பிரமிட்டுக்கு சமமாக
காசியப்பனின் வடிவில் உருவாகினாயே.

அநுராதபுரத்தில் அருமையாக
சிங்கம் போன்ற சீற்றத்துடன்
பச்சைப்பசேல் என்ற சோலையின் மத்தியில்
பவளம் போல ஜொலித்தாயே.

கண்ணதாசன் உன்னைக் கண்டால்
கவிதை மழையே பொழிந்திருப்பான் அன்று
S.P பாலசுப்பிரமணியம் உன்னைக் கண்டால்
பாட்டாக பாடி மகிழ்ந்திருப்பான் இன்று.

மதுரை மீனாட்சியுடன் போட்டியிட்டு
மங்காத ஓவியத்தினால் வெற்றி பெற்று
மக்களின் மனதை கொள்ளை கொண்டாய்
மங்காமல் எப்போதும் வீற்றிருந்தாயே.

பெண்களின் ஓவியத்தை பொக்கிஷமாக
பெருமையுடன் வர்ணம் தீட்டி
பேரழகுடன் மிளிர்கின்ற சிகிரியாவே
போற்றுகின்றோம் உன்னை.



# நடனம்.

நடனக்கலையை தேர்ந்தெடுத்து
நாட்டியங்கள் பல பயின்று
அரங்கேற்றம் ஏறு பெண்ணே - நீ
ஆனந்தக் கூத்தாடு கண்ணே.

நடனம் என்றும் தீராத உணர்வினிலே
நீங்காத இடம் பிடித்து - பெரு
நதியை அடைவாய் பெண்ணே - நீ
நானிலத்தில் வளர்வாய் கண்ணே.

இன்ப வெள்ளத்தில் மூழ்கி
இசையுடன் பாடி ஆடி
உள்ளமெல்லாம் பூரிப்படைவாய் பெண்ணே நீ
உயர் வானில் பறப்பாய் கண்ணே.

அரங்கேற்றம் ஏறி வந்து
அவையோர் முன்னின்று
உன் திறனை வெளிக்காட்டு பெண்ணே - நீ
உள்ளத்தில் குடி கொள்வாய் கண்ணே.

நடனத்தில் காலை வைத்து
நாளாந்தம் உன் இசை கேட்டு
நாட்டியத்தை வளர்த்திடுவாய் பெண்ணே-நீ
நாடெங்கும் பரவிடுவாய் கண்ணே.

ஆயிரம் ஆசான் முன் நின்று
ஆடிப் பாடி மகிழ்ந்து
அரங்கேற்றம் ஏறு பெண்ணே - நீ
ஆனந்தக் கூத்தாடு கண்ணே



## எங்க வீட்டு டெண்டுல்கர்

எட்டு வயது என் தம்பி
எங்க வீட்டு டெண்டுல்கர்
எடுப்பான் 'bat'யை கையிலே
எட்டுத்திசையும் பார்த்தோடும்.

முதல்பந்தில் அடிப்பான் சிக்ஸர்
முரளிதரனே அசந்து போவான்.
அடுத்த பந்தில் அடிப்பான் சிக்ஸர்.
அடுத்த வீட்டு கண்ணாடி பஞ்சர்

ஓவரில் எடுப்பான் முப்பத்தாறு
ஓட்டம் எடுப்பார்கள் கிரிக்கட் வல்லுனர்கள்.
அப்பா சொல்லை தட்டாமல்
ஆட்டிப் படைத்து விடுவான்.

அம்மாவின் தொல்லை தாங்காமல்
அவசரமாய் வருவான் வீட்டிற்கு
எடுப்பான் 'bat'யை கையிலே
எட்டுத்திசையும் பார்த்தோடும்.

அப்பாவின் அறிவுரையை கேட்டு
ஆரம்பத்தையே அசத்திடுவான்.
அக்கம் பக்க வீடுகளை
ஆட்டிப் படைத்து விட்டுவான்.

“சச்சின்” என்ற பெயருடனே
சாதனைகள் புரிந்திடுவான்.
எட்டு வயது என் தம்பி.
எங்க வீட்டு டெண்டுல்கர்.



# சிகரம் தொட்ட சச்சின்.

'1974 ஏப்ரல் 24ம் திகதி'.
மும்பையில் ஒரு அழுகுரல்
புறப்பட்டான் ஒரு மாவீரன்
புயலாக வந்தான் கிரிக்கட்டுக்குள்.

சிறு வயது குறும்புத்தனத்துடன்
சாவந்த்ய காலனியையே ஆட்டினான்.
அக்கா கொடுத்த 'bat' உடன்
ஆரம்பத்தையே அசத்தினான்.

பார்த்தது இந்திய கிரிக்கட் சபை
பரவசமானார்கள் மூத்த வீரர்கள்
இணைந்தான் சச்சின் அவர்களுடன்
இணைப்பாட்டம் குவிந்தது நல்லோட்டத்துடன்.

சாதனையை முறியடித்தான் கச்சிதமாக
சரணடைந்தார் டொன் பிரட்மன்.
அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, இலங்கையை
ஆரம்பத்திலேயே அடக்கி விட்டான்.

இவ்வாறு சாதித்த சச்சினை
இடைமறித்தான் ஒரு தேவதை
வந்தது '1995 . மே . 25'
புதிய, இனிங்சில் கால் வைத்தான்.

திருமணத்தின் பின் ஒரு முகம்
திருத்தமான வாழ்க்கை முறை
தித்திக்கும் குடும்பத்துடன்
திருப்தியாய் வாழ்ந்தான்.

இவனது முகத்துக்காகவே வந்தன.
'Boost' முதல் 'MRF' வரை.
அதிலும் கதாநாயகன் நம் ஹீரோ.
அட்டகாசமாக அசத்தினான்.

மாணிக்க தத்துப்பிள்ளையாக, கோஹினூர் வைரமாக
மங்காப் புகழுடன் ஜொலித்தான்.
கால்கள் நிலத்திலேயே இருந்தன.
காத்தது அஞ்சலியும், குடும்பமும்.

டென்டுல்கருக்கு வந்தது.
டெனிஸ் எல்போ வந்ததும்.
மீண்டான் சச்சின் விரைவிலே.
மகிழ்ச்சியில் குதித்தனர் ஆர்வலர்கள்.

மீண்டும் தொடர்ந்தான் சாதனையை
மீண்டது இந்திய அணி விரைவிலே
தோல்வியை கண்டு தயங்காது,
வெற்றியை கண்டு கர்வம் கொள்ளான்.

சச்சினின் சாதனையை முறியடிப்பது யார்?
எழுந்தது ஒரு புயல்
நம் அடுத்த டென்டுல்கர்.
அர்ஜுன் டென்டுல்கர் தான்.

# பெண்

பெண் பிள்ளை பிறந்து விட்டால்
பெற்றவரே இரங்க மாட்டார்
பெரியவளாய் வந்ததுமே
பெற்றவர்க்கோ தொல்லை என்பர்

பேசா மடந்தை யென்று
பேசும் பொற் சித்திரத்தை
போர்வையாக போர்த்து
போக வேண்டிய இடத்தையே மாற்றிடுவர்.

தெய்வத்தின் பிரதிநிதியெல்லோ அவள்
தெய்வமாக்கியே வைத்திடுவர்.
ஆனந்தக் கண்ணீர் மல்கி
ஆடம்பர வாழ்க்கையை கொடுத்திடுவர்.

திருமணத்தின் பின் திளைத்திருக்கும் வேளையில்
திடீரென்று வரும் வரதட்சணை கொடுமை.
என்ன செய்வது பெண்ணின் வாழ்க்கையை
எண்ணிப் பார்ப்பார்களா ஒருகண மேனும்.

# என் தாய்.

பத்து மாதம் வயிற்றினிலே
பார்த்துப் பார்த்து சுமந்தாள்.
பரவசமான வேளையிலே
பாரினிலே என்னை உதிக்கச் செய்தாள்.

சீராட்டிப் பாலூட்டி என்னை
சிறப்பாக வாழ கற்றுக் கொடுத்து
சீதேவியை வரவழைத்தாள் என்னுடன்
சிறப்பான வாழ்க்கை நடத்திடவே.

சண்டை பிடிக்க கூடாதென்று
சட்டங்கள் பல சொல்லித் தந்தாள்.
சாதனைகள் பல படைத்திடவே.
சாமர்த்தியமாக வழி காட்டினாள்.

இவ்வளவும் செய்த என் தாய்க்கு
இனி நான் என்ன செய்வது.
அவளே என் மகளாக வர
ஆண்டவனை வேண்டுகின்றேன்.

## எம்மினிய தேசம்.

சமாதானம் எங்கும் பரவட்டும்
சத்தியம் என்றும் ஜெயிக்கட்டும்.
சாந்தியைத் தேடி எல்லோரும்
சாகசமாக ஓடட்டும்.

சிங்களவர், தமிழர், முஸ்லீம் என்று
சிதறி வாழும் இந் நாட்டிலே
சுதந்திரமாக வாழ மட்டும்.
சுற்றித் திரிகின்றோம் கோலாயோ.

நட்சத்திரப் பட்டாளம் எம் நாட்டிலே
நடு நடுங்கி நிற்கும் நித்திலத்திலே
நம்பிக்கையினாலே மேலோங்கி
நன்நிலமை தவறாது வாழ்ந்திருவோம்.

நித்தம் நித்தம் பாரினிலே
நிகழ்ச்சியை செய்திருவோம்.
உன்னதமான நாட்டினிலே.
உயர்ச்சியுடனே வாழ்ந்திருவோம்.

# கிரிக்கட்

கனவானின் விளையாட்டாம் - இதில்
கடைசிவரை போராட்டமாம்.
கபில்தேவ் முதல் கங்குலி வரை
நாமம் கொண்ட விளையாட்டாம்.


இங்கிலாந்தில் உதித்ததாம்.
இந்தியாவிலும் பரவியதாம்.
இங்கிலீசுக்காரனின் மத்தியில்
இறுக்கமாகப் பற்றிக் கொண்டதாம்.

அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, இலங்கை போன்று
அயர்லாந்திலும் ஆட்டிப் படைத்ததாம்.
டொன்பிரட்மன், வில்லியம்ரிச்சட்டின் சாதனை
- உடன்
டெண்டுல்கர் வரை தொடர்ந்ததாம்.

உலகக் கோப்பை கிரிக்கட் என்று
உலகத்தையே ஆட்டிப் படைத்ததாம்.
நம்ப முடியாத சம்பவங்களுடன்
நாடு எங்கும் நிலை பெற்றதாம்.

பயிற்சியாளர்களின் பயிற்சியுடன்
பாரினிலே சாதனை நிகழ்ந்ததாம்.
பலவித நுட்பங்களை கையாண்டு
பல்லாயிரம் ரசிகர்களை இழுத்ததாம்.

அயல் நாட்டு மக்களுடனும்
அந்நியோன்யத்தை ஏற்படுத்தியதாம்.
கனவான்களின் விளையாட்டாம் - இதில்
கடைசி வரை போராட்டமாம்.



# நட்பு

தோழியே!
பாடசாலையில் நாம்
அறிமுகமான நாள்
நினைவிருக்கிறதா?

நட்பு என்னும் ஓடத்தில் - நாம்
நகையாடினோம் அன்று
அந்த நீர்வீழ்ச்சியிலே - கரையாது
உறவாடுகின்றோம் இன்று.

பள்ளியில் நாம் செய்த குறும்புகள்
பருவத்தில் நாம் பிடித்த சண்டைகள்
எவ்வாறு எம்மால் மறக்க முடியும்.
எம் இனிய நட்புக் காலத்தினை.

அன்று ஓர் நாள்
எம் நட்பினைப் பார்த்து
அனைவரும் பொறாமைப்பட்டது
எம் நெஞ்சினை விட்டு அகலுமா? சொல்.

# பூக்கள்.

பூவுலகில் புதுமை செய்து
புதுமகனாய் உதித்தவனே.
பாராளலே பரவசமாக்க
பாமரரையும் உதித்தவனே.

பல நிறத்தைக் கொண்டு
பலரையும் வசப்படுத்தியவனே.
ஒரு நாளாலே உதித்து
எல்லோரையும் சிறைப்பிடிப்பவனே.

பகலவன் மெல்லச் சிரிக்க
பறவைகள் மகிழ்ச்சியில் குதிக்க
பல வித வடிவங்களிலே - உன்
வெட்கத்தை வெளிப்படுத்துபவனே.

புதுமைக்கும் புதுமை சேர்க்க.
புதியவனாய் பிறந்தவனே.
நீ யார்? எம் மனதில்
நீங்காத இடம் பிடித்த பூக்களே.

# சுனாமி.

2004. 12. 26ம் திகதி
ஆழிப் பேரலையின் அகோரம்.
புறப்பட்டது ஒரு பேரலை
புயலாக வந்து அள்ளியது.

எத்தனை உயிர்கள்
எவ்வாறு மடிந்தன.
கேள்வி கேட்க நேரமில்லாமல்
கேள்விக்குறியாய் ஆனது வாழ்க்கை.

சாதி, சமய வேறுபாடின்றி
சாதம் வரை போராடிய மக்களின்
உயிர்களைப் பறித்த பேரலையை
உடனே மறக்க முடியுமா?

இந்தோனேசியாவினைத் தாயகமாகக் கொண்
இலங்கையையும் ஆட்டிப்படைத்த
சுனாமி ஆழிப் பேரலையை
ஒரு கணம் மேலும் நினைவு கூறுவோமா?

## உண்மைகள்:

வருவாய்க்கு மேலான செலவு கூடாது!
வசந்தங்கள் எப்போதும் வாழ்க்கையில் வீசாது!
பிரச்சனைகள் எப்போதும் நீங்காது!
பிணியுடன் வாழ்பவன் கஷ்டம் தீராது!

சொந்தங்கள் எப்போதும் உதவாது!
சொத்துக்கள் எப்போதும் சேராது!
ஏழைக் குடிசையில் அடுப்பு எரியாது!
ஓங்கிய வளர்ச்சியினால் கர்வம் கூடாது!

வாழ்க்கையில் வெற்றிகள் எப்போதும் வராது!
வாடிய முகத்துடன் இருத்தல் கூடாது!
சட்டங்கள் என்றும் அழியாது!
சண்டைகள் எப்போதும் கூடாது!

அசத்தியம் என்றும் ஜெயிக்காது!
சத்தியம் எப்போதும் தோற்காது!
சாதனைகள் எப்போதும் நடக்காது!
சாதகம் வரை முயற்சியை விடக் கூடாது!

## இளைஞர் சமுதாயத்தை விழித்து ----

நாளைய சமுதாயத் தலைவர்களே
நட்புடன் உங்களுக்கோர் விண்ணப்பம்.
அழுத்தல்களாம் அறிவுரைகளுடன்
அறிவியல் சமுதாயத்தை உருவாக்கிடுவோம்.

போதைவஸ்து, பாலியல் நடத்தை
போக்குவரத்தின் அதிவேகம்,
என்பனவற்றைத் தகர்த்தெறிந்து
ஏறுமுகத்தைக் காட்டிடுவோம்.

உங்கள் வாழ்க்கையில் ஒளியுண்டாக்க
உயர்ச்சியுடன் முயற்சி செய்திடுவோம்.
விண்வெளி தொடக்கம் விளையாட்டு வரை கற்று
வீர தீரச் சாதனை புரிந்திடுவோம்.

ஆயிரம் உறவுகள் எம்மிடம் இருந்தாலும்
அறிவுக் களஞ்சியத்தைப் போல் வருமா?
நீதியின் பாதையில் செயற்பட்டு
நிறைவான வாழ்வினை வாழ்ந்திடுவோம்.

## நானும் கணிதமும்.

நான் என்னை அறியும் முன்பே
உன்னை அறிந்தேன்.
நீ என் நண்பியாகியதால்
நிதமும் நான் முன்னேறினேன்.

முதலாம் ஆண்டில் காலடி வைத்த போது
முதலில் எண்களைக் கற்றுத் தந்தாய்.
இரண்டாம் ஆண்டிற்கு சென்ற போது
இரட்டை எண் பற்றி விளக்கினாய்.

மூன்றாம் ஆண்டில் மலர்ந்த போது
முக்கோணிகள் பற்றி கூறினாய்.
நான்காம் ஆண்டில் உதித்த போது.
நான்முகி பற்றி கற்றுக் கொடுத்தாய்.

ஐந்தாம் ஆண்டில் ஐக்கியமான போது
ஐங்கோணி குறித்து விளக்கமளித்தாய்.
ஆறாம் ஆண்டிற்கு சென்று அமர்ந்த போது.
அட்சர கணிதம் குறித்து அறிவுரை கூறினாய்

ஏழாம் ஆண்டிற்கு ஏறிய போது
எழுமாற்று குறித்தி விவாதித்தாய்.
எட்டாம் ஆண்டிற்கு எட்டிய போது
எண் கோலம் பற்றி எண்ணி வைத்தாய்.

ஒன்பதாம் ஆண்டில் ஒன்றித்த போது
ஒன்றிப்பு பற்றி கற்றுக் கொடுத்தாய்
பத்தாம் ஆண்டில் பதித்த போது
பல்கோணங்கள் பற்றி விளக்கமளித்தாய்

கல்விப் பொது தராதர காலம் நெருங்குகிறது.
கணிதத்தில் தேர்ச்சி பெற்று
கல்விக் காலை ஆழமாக வேண்டுமென்ற
காத்திருக்கின்றேன்.